# தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்
**Tamilar Remembrance Foundation - Swiss**

Postfach 439, 4528 Zuchwil

www.maveerarnaal.ch trfswiss@gmail.com


**13 வயதுப்பிரிவு**
(01.01.2005 – 31.12.2006 வரையில் பிறந்தோர்)

## மறக்குமோ மாவீரம்

என் அன்னை தமிழீழ மண் தன்னுள் அணைத்திருக்கும் அக்கினிக் குஞ்சுகளே! நெஞ்சம் தாங்காது விஞ்சும் பொழுதொன்றில் வஞ்சம் முடிக்க வல்ல திண்மை வீரர்களைப் பெற்றெடுக்கக் காத்திருக்கும் கருவூலங்களே! உயிர் கொண்ட தேசத்தின் வலி தீர்க்க, வழி தேடி, விடுதலைப் போர் தொடுத்த தேசியத் தலைவர் மாமா வளர்த்தெடுத்த வீரர்களே! தாய்மண்ணை மீட்டு, தன் இன மானம் காக்கவென விடுதலைத் தீ வளர்த்து ஆகுதி ஆனவரே! மறப்போமா உம்மை?

தாயகக் கனவை அகங்களில் நிறைத்து, தலைவரின் தானையில் புலியாகி நிமிர்ந்து, சரித்திரம் படைத்த சந்தன மேனியரே! செருக்களம் மீதில் உம் போர் வீரம் கண்டு அஞ்சினான் பகைவன். 'தடைகளைப் போட்டால் அடங்குவோம்' என்று எண்ணற்ற தடைகளை எம் மண் மீது போட்டான். தடைகளைத் தாண்டும் விடைகளைக் கண்டோம். எத்தடை வரினும் அத்தடை உடைத்து முப்படை கொண்டு நிமிர்ந்து நாம் நின்றோம். தனித்துவம் பேணி வளர்ச்சிகள் பெற்றோம். நீங்கள் சிந்திய குருதியும், ஈந்த உயிரும் எம் தேசத்தைச் செதுக்கியது.

பள்ளிப் படிப்பென்ன, பட்டப்படிப்பைக் கூட பாதியிலே விட்டுவிட்டு, அல்லற்படும் என் இனத்தின் பகை எதிர்த்து துயர் துடைக்கப் புலியாகி நிமிர்ந்தீரே! உம்மை ஈன்றெடுத்து ஆளாக்கிய பெற்றவரை, இல்லற வாழ்வில் கைப்பிடித்த உற்றதுணையை, தலைமுறைகள் தழைத்தோங்க பெற்றெடுத்த பிள்ளைகளைப் பிரிந்து தாய்மண்ணுக்காய் விதையாகிப் போனவரே! உங்கள் தியாகத்தின் உச்சத்தினால் எங்கள் தேசம் உயிர் பெற்றது. வெந்துயர் தீர்க்கக் கந்தகம் சுமந்தீர்! வெஞ்சமர் வென்று எம் முந்தையர் வீரம் காத்தீர்! அல்லும் பகலும் எம் மண் காத்த மறவரே! மறக்குமோ உம் மாவீரம்?

வெல்லும் பொழுதிற்காய் காத்திருந்த எம் இனத்தை வையகத்து அரசுகள் அணிசேர்ந்து அழித்தனவே! இன்று, தாய்நிலத்தை இழந்து நாம் நிர்க்கதியாய் நிற்கின்றோம். என் தேசம் அழகிழந்து ஆண்டுகள் ஒன்பது உருண்டோடிவிட்டன. இன்னும் அனைத்துலக நாடுகளின் மௌனம் கலையவில்லை. துயர் சுமந்த என் இனத்தின் துயரம் முடியவில்லை. இன்றும் தொடர்கிறது தமிழ் இன அழிப்பின் மிச்சங்கள்!

விழிப்பின்றிக் கிடக்கின்றோம் வீரத் தமிழர் நாம்! இழப்பின் வலிகள் இழந்தவர்களுக்கு மட்டுமே புரியும்! வலியுணர்ந்து வதையுண்ட பின்னரும் பழங்கதை பேசி காலத்தைக் கழிப்போமானால் வரலாறு எம்மை ஒருபோதும் மன்னிக்காது. வீரப்புலிப்படையின் பிள்ளைகளாய் பொங்கி எழு தமிழா! நீ எழுகின்ற நாளுக்காய் காத்திருக்கிறது உன் தாய்நாடு!

தலைகள் நிமிர்ந்து நாம் எம் தேசம் ஆள வேண்டும்! தேசப் புதல்வர்களின் துயிலிடங்கள் மீட்க வேண்டும்! பார்க்கும் இடமெல்லாம் புலிக்கொடி பறக்க வேண்டும்! தமிழ் அன்னை அகமகிழ்ந்து அரியணை ஏற வேண்டும்! பெருந்துயர் நீங்கி என் இனம் மீள வேண்டும்! பைந்தமிழ்ப் பாவலர்கள் மாவீரம் பாடவேண்டும்! அத்தனையும் ஈடேற தமிழீழம் மீட்க வேண்டும்! உறுதி எடு தமிழா! தமிழீழம் மீட்டு தனியரசு அமைப்போம்.

“ உணர்வை விதைப்போம். உறுதி எடுப்போம். தமிழீழம் மீட்போம்.”

நன்றி, வணக்கம்.